# ஒரு பரிசுத்த ஆலயம் (2:19-22)

*சிங்க அரசன் என்ற திரைப்படமானது பல இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களைக் கவர்ந்த ஒரு திரைப்படம் ஆகும். இது (வரை) வட்டாரத்தின் அரசனாயிருக்க நியமிக்கப்பட்ட சிம்பா என்ற இளம் சிங்கத்தின் கதையைக் கூறுகின்றது. ஒரு இடத்தில் சிம்பா தன்னை தனது கூறில் இருந்து வெளியே காண்கின்றது. இளம் வயதும், பக்குவமற்ற தன்மையும் கொண்ட அந்தச் சிங்கம் ஒரு புதிய இடத்தில் வாழ்வதற்காகத் தனது இல்லத்தையும், பழக்கமான வட்டாரங்களையும் விட்டு வெளியேறு கின்றது. அந்த இடத்தில் அது தான் அரசனாயிருக்கப் பிறந்ததுபோல் நடந்து கொள்ளவில்லை. அது தனது தராதரம் மற்றும் தனது கண்ணியம் ஆகியவற்றிலிருந்து மிகவும் தாழ்ந்த நிலையில் வாழ்கின்றது.*

*கிறிஸ்தவர்கள் சிம்பாவைப் போன்று இருக்கக் கூடும். நாம் கிறிஸ்தவப் பண்புக் கூறு அல்லது சுற்றுச் சூழலில் இருந்து வெளியேறி, மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கொண்டு வரப்பட்ட மக்களைப் போன்று நடந்து கொள்வதை நிறுத்தி விடக் கூடும். நாம் தேவனுடைய மக்களின் புதிய இனம் என்ற நமது உண்மை அடையாளத்தை மறந்து போய்விடக்கூடும்.*

*சிங்க அரசனான சிம்பா, தான் எப்படியிருக்கும்படி நியமிக்கப்பட்டது என்பதை மீண்டும் ஒருமுறை சற்றே காணும் வரையிலும் தனது உணர்வுக்கு வரவோ அல்லது மாறவோ இல்லை. இதே விஷயம் நமக்கும் உண்மையான தாக உள்ளது. தேவன் நம் வாழ்வில் என்ன செய்துள்ளார் என்பதையும் நமது அடைவிடம் எப்படி இருக்கும்படி அவர் நோக்கம் கொண்டுள்ளார் என்பதையும் பற்றிக்கொள்வதற்கு நாம் திரும்பவும் கொண்டு வரப்பட வேண்டியது அவசியமாகின்றது.*

*எபேசியர் 2ன் பிற்பகுதியில், அதைப் பவுல் எபேசியக் கிறிஸ்தவர் களுக்குச் செய்ய முயற்சித்தார். அவர்களுக்கு அவர் கிறிஸ்தவர்களின் வாழ்வில் தேவனுடைய கிருபையின் செயல்தாக்கம் மற்றும் தேவன் தம் மக்களிடம் விரும்பும் விஷயங்கள் ஆகியவை பற்றிய சிறு குறிப்பைக் கொடுத்தார்.*

*2:11-18ல் பவுல், நம் வாழ்வில் தேவனுடைய கிருபையின் செயல் தாக்கம் பற்றிய இந்த சத்தியத்தை ஆலோசனையாகத் தெரிவித்தார்: தேவனு டைய கிருபையானது நம்மை மனுக்குலத்தில் புதிய இனமாக ஏற்படுத்தியுள்ளது. நம்மை நாம் ஒரு காலத்தில் இருந்த நிலையிலிருந்து ஒரு சிறிது மட்டுமே மாறுபட்டவர்களாய் இருப்பதாக அல்ல ஆனால் “கிறிஸ்துவின் இரத்தத்தினால்” முற்றிலும் புதிய சமுதாய மக்களாய் இருக்கக்*

கொண்டு வரப்பட்டுள்ளவர்களாகக் காணும்படி தேவன் விரும்புகின்றார் (2:13).

பவுல் 2:19-22ல் சித்தரிப்பை மாற்றினார்: தேவனுடைய கிருபையானது நம்மை ஒரு பரிசுத்த ஆலயமாக்கியுள்ளது. உங்கள் வாழ்வானது இதை எப்பொழுதுமே காண்பிக்காமல் இருக்கலாம். எனது வாழ்வும் நிச்சயமாக எப்பொழுதும் அவ்வாறு செய்வதில்லை. சிம்பாவைப் போல் நாம் சில வேளைகளில் நமது நிலைகளை இழந்துபோய், தேவனுடைய பரிசுத்தத் துடன் கலவாத விஷயங்களில் குதித்தாடி விடுகிறோம். சிம்பா தான் சிங்க அரசனாய் இருக்கப் பிறந்தவாறு வாழத் தொடங்கு முன்னர் தான் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்தப்பட்டதைக் காண வேண்டியிருந்தது. நாம் தேவனை கனப்படுத்துகின்ற வாழ்வை வாழ நமக்கு உதவி செய்ய பவுலின் வார்த்தைகள் அர்த்தப்படுத்தப்படுகின்றன:

> ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள் (2:19-22).

இவ்வசனப் பகுதியின் மையமான சத்தியம் பின்வருமாறு: தேவன் தாமே வாசம் செய்கின்ற பரிசுத்த ஆலயமாகக் கிறிஸ்தவர்கள் இருக்கும்படி தேவன் நியமித்துள்ளார்.

ஒரு கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் உங்களைப்பற்றி இதைப் புரிந்து கொள்வது அவசியமாகும். தேவன் தமக்காகக் கட்டி எழுப்புகின்ற மாபெரும் ஆலயத்தில் நீங்கள் ஒரு பாகமாக இருக்கின்றீர்கள். இந்த வசனப் பகுதியை நாம் கண்ணோக்குகையில், நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் அர்த்தப்படுத்துகின்றதை நாம் மிகச் சரியாகப் பற்றிக் கொள்ளுகின்றோம்.

## அஸ்திபாரம்

அஸ்திபாரத்தில் தொடங்கி, இந்தப் பரிசுத்த ஆலயத்தின் மூன்று சாயல்களைப் பவுல் குறிப்பிட்டார். நானும் நீங்களும் அங்கம் வகிக்கும் இந்தப் பரிசுத்த ஆலயத்திற்கு "அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள்" என்பவர்கள் அஸ்திபாரமாய் இருக்கின்றார்கள். அவர்கள் - பவுல், யோவான், பேதுரு முதலியவர்கள் - யாராய் இருந்தனர் என்பது பற்றிப் பவுல் தம் சிந்தையில் அதிகம் கருத்துக் கொண்டிருந்ததில்லை, ஆனால் இந்தப் பரிசுத்த ஆலயத்திற்கு அஸ்திபாரத்தை நிலைநாட்ட அவர்கள் செய்தது என்ன என்பதைப் பற்றி அதிகம் கருத்துக் கொண்டிருந்தார்.

அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் தேவனுடைய சத்தியத்தை மனிதர்களுக்கு அதிகாரத்துவத்துடன் வெளிப்படுத்தினார்கள்.

முதலாம் நூற்றாண்டில், தேவன் "அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும்" நமது விசுவாசத்திற்கான அடிப்படை சத்தியங்களை வெளிப்படுத்தினார். இந்த சத்தியங்கள் நமக்காகப் புதிய ஏற்பாட்டில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. நமது வாழ்வுக்கான நிச்சயமான ஒரே அஸ்திபாரம் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற சத்தியங்களில் அஸ்திபாரமாகவே உள்ளது (2 தீமோ. 3:16, 17).

வேறு எந்த வசனங்களும் நம்மை நித்திய ஜீவனுக்கு வழிநடத்திச் செல்லாது. வேறு எந்த வசனமும் நம்மை இரட்சிக்க முடியாது. வேறு எந்த வசனமும் தேவனுடைய வழியை நமக்குக் காண்பிப்பதற்காக நிலவுவதில்லை. வேறு எந்த வசனங்களும் நம்மை தேவனுடைய பரிசுத்த ஆலயத்தின் பாகமாக மாற்றும் வல்லமை கொண்டவைகளாய் இருப்பதில்லை.

*The Firm* மற்றும் *The Client* போன்ற மிகச் சிறப்பாய் விற்பனையாகிற புதினங்களை (நாவல்) ஜான் கிரிஷ்ஹாம் என்பவர் எழுதுகின்றார். அவரது புத்தகங்கள் மக்கள் கூட்டங்களுக்கு மகிழ்ச்சியூட்டுகின்றன, ஆனால் அவைகள் யாரேனும் ஒருவருக்காவது நித்திய ஜீவனை தரக் கூடிய வசனங்களைக் கொண்டிருப்பதில்லை. நமது உணர்வுகளை வெளிப்படுத்தும் மிகப் புகழ்வாய்ந்த பாடல்கள் நித்திய ஜீவனுக்கான வழியைக் காண்பிப்பதில்லை. உங்கள் உள்ளூர் செய்தித் தாளின் முன் பக்கத்திலோ அல்லது குமுதம் அல்லது ராணி போன்ற பத்திரிகைகளின் அட்டை செய்திகளிலோ நீங்கள் தேவனிடத்தில் சேரும் வழியைக் காணமாட்டீர்கள். புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ''அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள்'' ஆகியோரின் வசனங்கள் மூலம் மட்டுமே நீங்கள் என்றென்றும் வாழ்வது எப்படி என்பதைக் கண்டறிய முடியும். அவர்களின் வசனங்களே தேவனுடைய ஆலயம் கட்டி எழுப்பப்படுவதற்கு அடிப்படையாய் இருக்கிற அஸ்திபாரமாக உள்ளன.

## மூலைக்கல்

தேவனுடைய பரிசுத்த ஆலயத்தில் இரண்டாவது சாயலைப் பவுல் விவரித்தார்: மூலைக்கல். இது, "கிறிஸ்து இயேசு தாமே மூலைக்கல்லாக" (2:20ஆ) உள்ள ஆலயமாக இருக்கின்றது. வர இருந்த மேசியாவைப் பற்றிய தேவனுடைய வார்த்தையை ஏசாயாவின் புத்தகத்தில் வேதாகமம் பதிவு செய்துள்ளது: "... இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப் பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும் ..." (ஏசா. 28:16).

மூலைக்கல் என்பது கட்டிட அமைப்பில் ஒரு முக்கியமான கல்லாக உள்ளது. இது முழுக் கட்டிடமும் ஒன்று சேர்ந்திருக்கும்படி தாங்கி நிற்கின்றது. கட்டுமானப் பணியாளர்கள் அரசனைக் கனப்படுத்துவதற்காக இக்கல்லின் மீது அரசனின் பெயரை செதுக்குமளவுக்கு மூலைக்கல் தனிச்

சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. இந்தச் சிறப்பான கல்லானது அஸ்திபாரத்தின் உறுதித்தன்மையையும் முழுக் கட்டிடத்தின் இயல்பையும் தீர்மானித்தது.

இயேசுவே தம்முடைய மக்களுக்கு நிலைப்படுத்தும் சக்தியாக, மூலைக்கல்லாக விளங்குகின்றார். நாம் அவருடன் தொடர்பு கொண்டு, அவரது வாழ்வுடன் நமது வாழ்வை இணைவுறுத்துகின்ற பொழுது, நாம் ஒன்றுகூடி பிணைக்கப்பட்டு, இன்னும் அதிகம் அதிகமாக தேவன் விரும்புகின்ற பரிசுத்த ஆலயம் ஆகின்றோம். துரதிஷ்டவசமாக நாம் இயேசுவைப் போலிருப்பதில் அடிக்கடி தவறிவிடுகிறோம், இதன் விளைவாக நாம் பரிசுத்த ஆலயம்போல் காணப்படுவதினின்று தவறி விடுகின்றோம்.

எடுத்துக்காட்டாக, இயேசு "ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" (மத். 19:6; மாற். 10:9) என்று கூறியுள்ள பொழுதும்கூட, கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் ஏதாவது காரணத்திற்காக விவாகரத்துச் செய்தல் என்பது மிகவும் மிகவும் அதிகமாகிக் கொண்டுள்ளது. இந்த விஷயத்தில் நாம் மூலைக்கல்லுடன் ஒன்றிணையத் தவறுகின்றோம்.

ஒரு கிறிஸ்தவ இளைஞர் இன்னொரு கிறிஸ்தவரல்லாதவருடன் மதுக் கடைக்குச் சென்று ஒரு மதுப்புட்டியைத் திறந்து பானம் பண்ணுதல் என்ற செயலை, அவரது பண்பாடற்ற கற்பனையானது அச்செயலை இயேசு செய்வார் என்று சித்தரிக்க இயலாத நிலையிலும் அவ்வாறு செய்யலாம். இயேசு நேர்மையின் மதிப்பீடுகளைப் போதித்திருந்த போதிலும், ஞாயிற்றுக் கிழமையன்று சபையில் இயேசுவைப் புகழ்ந்து பாடும் வர்த்தகர் ஒருவர் திங்கட்கிழமையன்று பணிக்குச் சென்று ஒரு வியாபாரத்தை முடிப்பதற்காகச் சத்தியத்தை வளைக்கலாம்.

நமது வாழ்வு இயேசுவின் வாழ்வுடன் ஒருமுனைப்பட்டிருக்க வேண்டும். நமது செயல்கள், சிந்தனைகள், வார்த்தைகள் அல்லது எண்ணப் போக்குகள் ஆகியவற்றில் நாம் எவ்விடத்தில் இயேசுவுடன் ஒருமுனைப் படாமல் இருக்கிறோம் என்பதைக் காண்பதற்கு நாம் யாவரும் இயேசுவை இன்னும் அதிகமாய் நெருங்கிக் கண்ணோக்க வேண்டும்.

நாம் இயேசுவை உள்ளூர் சபைகளின் மூலைக்கல்லாகவும் காண வேண்டும். நமது சபைக் குடும்பங்களின் உறுப்பினர்கள் தங்கள் வாழ்வை அன்றாடம் இயேசுவுடன் ஒருமுனைப் படுத்தினால் சபைக்குடும்பங்கள் பலமுள்ளவைகளாக முடியும். நாம் இயேசுவை மகிமைப்படுத்தி தேவனை ஆராதிப்பதன் மூலம் இயேசுவை நமது அக்கறையின் மையமாக மேற்கொள்வது அவசியம். நாம் மற்றவர்களைச் சுவிசேஷத்தின் மூலமாக அவருடன் தொடர்பு கொள்ளும்படி கொண்டு வரவேண்டும். இவ்வழி முறையில், சபையானது தான் எப்பொழுதும் இருந்துள்ளதைவிடப் பலம் வாய்ந்ததாக முடியும்.

## கட்டுமானக் கற்கள்

பரிசுத்த ஆலயத்தின் மூன்றாவது சாயலாக உள்ளது கட்டுமானக் கற்கள் ஆகும். அவைகள் யாவை? பவுல் இவற்றை அடையாளம் கண்டார்:

"அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (2:22).

எபேசியருக்கு(இந்த நிருபத்தை)ப் பவுல் எழுதிய பொழுது, யூதர்களின் ஆலயம் இன்னமும் எருசலேமில் நிலை நின்றிருந்தது. புறஜாதியார் அந்த ஆலயத்தினுள் வராமல் தவிர்க்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அதை நெருங்கி வர முடிந்திருந்தது, ஆனால் அவர்கள் அதனுள் பிரவேசிக்க முடியாதிருந்தது. இது இன்றைய நாட்களில் ரஷ்மோர் மலையைக் காணச் செல்வது போன்றதாகும். சுற்றுலாப் பயணிகள் சற்று தூரத்தில் உள்ள நடைமேடையின் மீது நின்று மலையில் செதுக்கப்பட்டுள்ள சித்திரங் களைப் பார்வையிடுகின்றார்கள். புறஜாதியார், ஆலயத்திற்கு நெருக்கமாக மட்டுமே செல்ல முடிந்திருந்தது. குறிப்பிட்ட எல்லையைத் தாண்டிச் செல்லுதல் புறஜாதியாருக்குத் தடை செய்யப்பட்டிருந்தது என்பதை (ஆலயத்தின்) எல்லா இடங்களிலும் இருந்த அறிவிப்புப் பலகைகள் அறிவித்தன.

புதிய ஏற்பாட்டின் கீழ் இந்தச் சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன. எந்த ஒரு குறிப்பிட்ட கட்டிடமும் தேவனுடைய ஆலயமாகச் செயல் படுவதில்லை. எந்த ஒரு நகரும், அந்நகர்தான் தேவனுடைய ஆலயம் அமைவு பெற வேண்டிய ஒரே நகரம் என்று உரிமைகோர முடியாது. எவரொருவரும் ஒரு வரைபடத்திலோ அல்லது உலக உருண்டையிலோ ஓரிடத்தைச் சுட்டிக்காண்பித்து, "நீங்கள் தேவனுடைய ஆலயத்தைக் காண வேண்டுமென்றால் இங்குதான் நீங்கள் செல்ல வேண்டும்" என்று கூற முடியாது.

அவ்வகையான தேவாலயம் இப்பொழுது/இனியும் நிலவுவதில்லை. தேவன் கிறிஸ்துவுக்குள் மனுக்குலத்தின் ஒரு புதிய இனத்தைப் படைத்தது போன்றே, அவர் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய ஆலயத்தையும் கட்டியெழுப்பி யிருக்கின்றார். கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒவ்வொரு நபரும் இம்மாபெரும் ஆலயத்தின் கட்டுமானக் கற்களில் ஒன்றாக ஆகின்றார்.

சில நாட்களுக்கு முன்பு வாஷிங்டன் D.C.யில் நடந்த ஒரு கொண்டாட்டம் பற்றிய தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றை நான் கண்டேன். அது அமெரிக்காவுக்கு ஒரு இசைப் பாராட்டு நிகழ்ச்சியாக இருந்தது. அந்த ஒளிப்பரப்பானது, அந்நகரில் அமைந்திருந்த வெள்ளை மாளிகை, வாஷிங்டன் நினைவுச் சின்னம், ஜெஃபர்ஸன் நினைவிடம், மற்றும் லிங்கன் நினைவிடம் உட்படக் கம்பீரமான கட்டிடங்கள் சிலவற்றைக் காண்பித்தது.

அந்தக் கட்டிடங்கள் ஒன்றாகத் தூக்கியெறிந்து விடப்படவில்லை. அவைகள் மதிப்பையும் மரியாதையையும் ஊட்டக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட கட்டிடக் கலையின் வகையொன்றைப் பிரதிநிதித்து வப்படுத்தின. லிங்கன் நினைவிடத்தினுள்ளே நான் சில விளையாட்டுகள் விளையாடலாம் என்று கற்பனை செய்து பார்க்கக் கூட முடியாது. இவ்வகையான கட்டிடங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் விஷயங்களினி மித்தமாக இவைகளில் சில செயல்கள் செய்யலாகாது.

உள்ளூர் சபைக்குழுமங்கள் ஆராதிக்க ஒன்றுகூடிவரும் கட்டிடமானது

தேவனுடைய ஆலயமல்ல. இருந்தாலும், சபையார் ஆராதிக்கக் கூடுகின்ற பொழுது, தேவனுடைய ஆலயம் அங்குள்ளது. தேவனுடைய மக்கள் அங்குள்ள காரணத்தினால் அது (ஆலயம்) அங்குள்ளது. தேவனுடைய மக்களே தேவனுடைய ஆலயத்தை ஏற்படுத்துகின்றனர் (அல்லது) தேவனுடைய மக்களே தேவனுடைய ஆலயமாக உள்ளனர்.

தேவன் தமது ஆலயத்தை ஒன்றுகூட்டி வெறுமனே எறிந்து விட்டிருப்பதில்லை. நீங்கள் அவரது ஆலயத்தின் அங்கமாய் இருப்பதற்கு உங்களை அதில் பொருத்தி, வடிவமைத்து, தயார் படுத்துவதற்காக அவர் தம்முடைய குமாரனையே இந்த உலகத்திற்கு அனுப்பி வைத்தார்.

தேவனுடைய ஆலயத்தைக் காண்பதற்கு மக்கள் எருசலேமுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். இன்றைய நாட்களில் தேவனைக் கனப்படுத்துகின்ற ஆலயத்தைக் காண மக்கள் எங்கு செல்லுகின்றார்கள்? அவர்கள் காணக் கூடிய ஒரே ஆலயமாய் இருப்பது கிறிஸ்தவர்கள் மட்டுமே. கிறிஸ்துவுக்கு உரியவர்களில் அவர்கள் (மக்கள்) காண்கின்றவைகளே தேவனுக்கான மகிமைக்கென்று அவர்கள் கொண்டுள்ள சிறு துணுக்காக உள்ளது!

அவர்கள் காண்கின்றது என்ன? சபை என்ற வகையில் நாம் தேவனைப் பற்றி அவர்களுக்குக் கூறுவது என்ன? அவர்கள் நம்மில் அவருடைய அன்பை, அவருடைய இரக்கத்தை, அவருடைய பராமரிப்பை/ அக்கறையை, அவருடைய பரிசுத்தத்தை மற்றும் அவருடைய பொறுமையைக் காண்கின்றார்களா? அவர்கள் நம் மூலமாக உண்மையிலேயே தேவன் பொருட்படுத்துகின்ற விஷயங்களைக் காண்கின்றார்களா?

மக்கள் தேவனுடைய ஆலயத்தை எதிர்கொள்ளும் பொழுது அவர்கள் எதைக் காண்கின்றனர்? கிறிஸ்தவர்கள் (தேவனுடைய ஆலயத்தின்) கட்டுமானக் கற்களாய் இருக்கின்றார்கள். தேவன் இவ்வுலகில் கொண்டுள்ள ஒரே ஆலயத்தில் நீங்களும் நானும் அங்கம் வகிக்கின்றோம். இந்த ஆலயம் எவ்வகைப்பட்டதாக உள்ளது?

## முடிவுரை

சிங்க அரசனான சிம்பா தனது வாழ்வில், தனது அடைவிடத்தைத் தானே மறந்து போன ஒரு காலகட்டத்தினூடே சென்றது. அது ஒரு அரசனாயிருக்கப் பிறந்தது என்று அதற்கு நினைவூட்ட வேண்டியதாயிருந்தது.

பவுல் 2:19-22ல், ‘‘தேவனுடைய ஆலயமாயிருப்பதே உங்கள் அடைவிடமாக உள்ளது. தேவன் கற்களாலும், சிமென்ட்கலவையாலும் மற்றும் மரத்தினாலும் ஆன ஆலயம் ஒன்றை விரும்புவதில்லை. ஒரு வரைபடத்தில் நீங்கள் காட்டக் கூடிய ஒரு கோயிலில் வசித்தல் என்பது அவருடைய விருப்பமல்ல. அவர் தம்முடைய மக்களின் இருதயங்களில் வசிக்க விரும்புகின்றார். அவர் மாற்றப்பட்டுள்ள வாழ்வுகளில் தம்முடைய மகிமையைக் காட்சிப்படுத்த விரும்புகின்றார். அவர் தாம் உண்மையில் யார் என்பதை மக்கள் காணும்படி விரும்புகின்றார்’’ என்று கூறுகின்றார்.

தேவன் தம்முடைய மக்களில் வாசம் பண்ணுவதை நம்மில் மக்கள்

*காண முடியுமா? மக்கள் தேவனை மகிமைப்படுத்தும்படி விருப்பமுள்ளவர்களாவதற்குரிய போதிய நற்பண்புகளை உங்கள் பகுதியில் கூடிவருகிற உள்ளூர் சபையில் காண்கின்றார்களா?*

*இந்த வாரத்தில் உங்கள் வாழ்வை மாறுபட்ட ஒரு ஒளியில் கண்ணோக்குங்கள். நீங்கள் வெறுமனே பிழைப்புக்காக உழைப்பவராகவோ, ஒரு குடும்ப நிர்வாகியாகவோ, பள்ளி செல்லுபவராகவோ, கடைக்குச் செல்பவராகவோ, விளையாடுபவராகவோ அல்லது முதலீடு செய்பவராகவோ இருப்பதில்லை. நீங்கள் தேவனுடன் இணைந்து மக்களை இயேசுவுடன் தொடர்பு கொள்ளக் கொண்டு வந்து சேர்க்கும் ஊழியம் செய்கின்றீர்கள். இந்த வாரத்தில் நீங்கள் சந்திக்கும் மக்கள் ஒவ்வொருவரும் தேவன் தமது பரிசுத்த ஆலயத்தில் பொருத்துவதற்கு விரும்பும் நபராக இருக்கின்றார். அவர்களில் ஒவ்வொருவருக்கும் அவர் (தேவன்) தம் இருதயத்தில் ஒரு இடத்தை ஒதுக்கியிருக்கின்றார்.*

*நீங்கள் யாராயிருக்கின்றீர்கள் என்பதை மறந்து விட வேண்டாம். மக்கள் எப்பொழுதாவது தேவனுடைய பரிசுத்த ஆலயத்தின் மகிமையை காண வேண்டுமென்றால் அது உங்களிலும் என்னிலுமாகத்தான் இருக்கும்.*